


**Bismillah-ir-Rahman-ir-Rahim**

# MESSAGE OF THE KHALIFATHULLAH

## Hazrat Munir Ahmad Azim (A)

*22 April 2020*

### THE ADVERSE EFFECTS OF MODERN TECHNOLOGY & OBEDIENCE TO PARENTS.

### *நவீன தொழில் நுட்பத்தின் எதிர்விளைவுகளும், பெற்றோருக்கு கீழ்ப்படிதலும்*

அனைவருக்கும் ஸலாம் தெரிவித்ததை தொடர்ந்து தஷஹ்ஹுத், தஅவ்வுது மற்றும் அல்∴பாத்திஹா ஓதியபிறகு ஹஸ்ரத் கலீ∴பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் தனது செய்தியை வழங்கினார்கள்.

என் அன்புக்குரிய குழந்தைகளே, மரியாதைக்குரிய பெற்றோர்களே!

“அஸ்ஸலாமு அலைக்கும் வாரஹ் மதுல்லாஹி வாபரக்காத்துஹு”,

டெலிவிஷன், ஸ்மார்ட் போன் மற்றும் கம்பியூட்டர் போன்ற நவீன தொழில்நுட்ப



கருவிகளின் தொடர்ச்சியான பயன்பாடு விளைவிக்கும் ஆபத்துகள் குறித்து உங்களுக்கு கவனமூட்டுவதற்காக நான் இந்த செய்தியை வழங்குகிறேன். இறை வெளிப்பாட்டின் ஆரம்பத்திலிருந்தே இது தொடர்பாக அல்லாஹ் எனக்கு பலவிஷயங்களை கற்பித்து வந்தான். 2020 ஏப்ரல் 3-ம் தேதி வெள்ளிக்கிழமையன்றும் இது தொடர்பான செய்தியை நான் பெற்றிருந்தேன். அன்றைய நாள் எனது வெள்ளிக்கிழமை பேருரையின்போது அதை நான் உங்களுக்குத் தெரிவித்திருந்தேன்.

இன்று நான் உங்களுக்கு இந்த விஷயத்தின் பக்கம் கவனமூட்டவிளைகிறேன். இன்று காலையில் (03 ஏப்ரல் 2020) தஹ்ஜ்ஜுத் தொழுகைக்கு பிறகு நான் திக்ர் மற்றும் துவாக்களைச் செய்து கொண்டிருந்தபோது, திடீரென்று அல்லாஹ் என் இதயத்திலும் மனதிலும் ஆற்றலுடன் ஏதோ சில விஷயங்களை பதிய வைத்தான். மேலும் அவன் இதன் பக்கம் சுட்டிக்காட்டுவதில் கவனம் செலுத்துவதற்காக நான் எனது திக்ரை நிறுத்த வேண்டியதாயிற்று. ஏராளமான மக்கள் நோய்வாய்ப்படுவார்கள், அந்த நோய்யானது அவர்களின் நரம்புகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துபவையாகும். மேலும் அதன் காரணமாக அவர்கள் மனச் சோர்வை அடைவார்கள். அவர்கள் (இளைஞர்கள்) காதுகளில் இயர்போன்களுடன், மக்களைச் சுற்றி எதையும் புரிந்து கொள்ளாமல், பைத்தியம் போல் தெருக்களில் நடக்கின்றனர். மேலும், செல்போன்கள், ஸ்மார்ட் போன்கள் மற்றும் கம்பியூட்டர் போன்றவை உள்ளன.... ஆம் அல்லாஹ் தனது அருளால் அவன் உங்களுக்கு இதையெல்லாம் கொடுத்திருக்கிறான், ஆனால் அவன் உங்களுக்கு வழங்கிய எல்லாவற்றிலும், அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்பது உங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். அவன் இது தொடர்பாக நமக்கு இயற்கையில் விளக்கம் அளித்துள்ளான். அல்லாஹ் உங்களுக்கு கத்திகளை வழங்கியிருக்கின்றான் இல்லையா? ஆனால் நீங்கள் அதை நல்ல முறையிலும் வழியிலும் பயன்படுத்த வேண்டும். அவன் பயன்படுத்த நமக்கு தீப்பெட்டிகளையும் வழங்கியுள்ளான். ஆனால் அதற்கான தேவை இருக்கும் இடத்தில் நீங்கள் அதைப் பயன்படுத்துகிறீர்கள், எடுத்துக்காட்டாக, உணவை சமைக்க அதை நீங்கள் பயன்படுத்துகிறீர்கள். அதைபோலவே தேவையில்லாமல் கம்பியூட்டர் அல்லது ஸ்மார்ட் போன் மற்றும் வாட்ஸ்அப் போன்ற சமூக ஊடகங்களில் நீங்கள் மூழ்கியிருப்பது நியாயமற்றது. இவை அனைத்தும் மக்களின் ஆரோக்கியத்திற்கு எவ்வளவு சேதம் விளைவிக்கும் என்று உங்களுக்குத் தெரியுமா?

இளைஞர்களின் ஆரோக்கியத்தைப் பற்றிய தகவலை வெளிப்பாடுகளின் மூலம் நீண்ட காலமாக நான் பெற்று வருகிறேன் என்பது ஓர் உண்மையாகும். அது அவர்களின் உடல் நலம் எந்த அளவு பாதிக்கின்றது. பாருங்கள அதன் தொடர்ச்சியான பயன்பாடு மிக அருகிலுள்ள எதிர் காலத்தில், சில தொற்று நோய்கள் காரணமாக உங்கள் தொலைபேசிகளை (போன்களை) நீங்கள் எடுக்க முடியாது. இது போன்ற நோய்களிலிருந்துள்ள மாசுபடுத்தல் காற்றில் உள்ளன என்று நீங்கள் கேட்கும்போது, நீங்கள் உங்கள் தொலைபேசிகளை எடுக்க முடியாத சூழ்நிலை உருவாகும். ஆகவே

அதைப் பயன்படுத்துவதற்கு சில குறிப்பிட்ட நேரங்கள் உள்ளன, ஆம். எல்லாவற்றையும் அவற்றின் குறிப்பிட்ட நேரத்தில் செய்ய வேண்டும்.

இஸ்லாத்தின் ஐந்து தூண்களை அல்லாஹ் எவ்வாறு நமக்கு அமைத்துக் கொடுத்தான் என்று பாருங்கள். ஒரு நாளைக்கு ஐந்து முறை அவனை வணங்க வேண்டும் என்று அவன் நமக்கு கட்டளையிட்டுள்ளான். ஆனால் ஒவ்வொரு தொழுகைக்கும் குறிப்பிட்ட நேரங்கள் உள்ளன. தொழுகைக்கும், திக்ருக்கும் ஒரு நேரம். நீங்கள் வேலைக்கு செல்வதற்கு ஒரு நேரம், உங்கள் குடும்ப உறுப்பினர்களைப் பார்ப்பதற்கும் கவனித்துக் கொள்வதற்கும் ஒரு நேரம், அவ்வாறு எல்லா ஒவ்வொன்றுக்கும் குறிப்பிட்ட நேரங்கள் உள்ளன. நீங்கள் காலையில் எழுந்தது முதல் இரவு வரை மேம்பட்ட மற்றும் தீங்கு விளைவிக்கும் தொழில்நுட்பக் கருவிகளில் ஒட்டிக் கொண்டிருந்தோம் என்று என்னிடம் சொல்லாதீர்கள். இந்த நவீன தொழில் நுட்ப கருவிகளின் மூலம் பல வகையான தீங்குகள் நடக்கின்றன. அதன் மூலம் வெறுப்பை உருவாக்கும் போலி செய்திகளும் பரப்பப்படுகின்றன. இதன் கீழ் இதுபோன்ற நிறைய விஷயங்கள் நடக்கின்றன.

இன்று நான் பெற்றதை வெளிப்படையாக உங்களுக்கு பகிர்ந்து கொள்ள நான் விரும்புகிறேன்.

நீங்கள் நம்புகிறீர்களா இல்லையா அல்லது இந்த நபர் முட்டாள்தனமாக பேசுகிறார் என்று சிலர் சொல்லலாம். அவர்கள் அவ்வாறு சொல்லட்டும். ஆனால் நான் செய்தியை வழங்குவதற்காகவே வந்துள்ளேன். நீங்கள் உங்கள் உடல் நலத்தைப் பாருங்கள். எல்லா மக்களும், குறிப்பாக இளைஞர்கள்! எப்போதும் காதுகளில் இயர்போனை வைத்து நடமாடும் பலர் உள்ளனர். ஒரு சாதாரண நபர் இயல்பாகவே எதையாவது கேட்க முடியாமலிருக்கலாம். ஆனால் இளைஞர்களைப் பொறுத்தவரை, அவர்கள் கேட்கும் திறனை வேண்டுமென்றே தடுக்கின்றனர். இருபுறமும் கேட்க அல்லாஹ் இரண்டு காதுகளை வழங்கியுள்ளான். ஆனால் பொருத்தமற்ற விஷயங்களைக் கேட்க அவர்கள் காதுகளைப் பயன்படுத்துகின்றனர். அவர்களின் கவனமெல்லாம் இத்தகைய விஷயங்களின் பக்கம் திருப்பிக் கொள்கின்றனர். உண்மையில் அவர்கள் அத்தகைய விஷயங்களில் கவனம் செலுத்துவதைப் போல தங்கள் பிரார்த்தனையில் கூட அதாவது அவர்களை படைத்தவன்மீது கூட கவனம் செலுத்தமாட்டார்கள். அவர்கள் தங்கள் படைப்பாளனைப் பற்றி நினைவுகோரமாட்டார்கள். அவன் அவர்களுக்கு எந்த அளவு இரக்கம் காட்டியுள்ளான்

என்பதை கவனிக்கமாட்டார்கள். அவன் அவர்களை எவ்வாறு படைத்தான் என்பதையும் அவர்களுடைய பகுதியிலிருந்து எந்த முயற்சியும் இல்லாமல் அனைத்தும் அவன் வழங்கினான் என்பதையும் அவர்கள் எண்ணமாட்டார்கள்.

கம்பியூட்டர்கள், ஸ்மார்ட் போன்கள் அல்லது வாட்ஸ்அப் போன்றவற்றில் அவர்கள் முழு கவனம் செலுத்தியவாறு இருக்கின்றனர். உங்களுக்கு தெரியும், இவை அனைத்தும் மற்றொரு வழியில் பெரும் அழிவை உருவாக்குகின்றன. இத்தகைய கருவிகளை தவறாக பயன்படுத்தும் நபர்கள் உள்ளனர். எல்லா வகையிலும் அதை அவர்கள் தவறாக பயன்படுத்துகின்றனர். நான் உங்களுக்கு சொல்கிறேன். இவ்விஷயத்தில் நான் ஒரு புது முகமாகயிருக்கிறேன். இவற்றில் நான் ஒரு பூஜ்ஜியம். இவை அனைத்திலும் பூஜ்ஜிய அறிவு மட்டுமே எனக்கு இருக்கின்றது. அல்லாஹ்வின் அருளால் எதற்கும், நான் என் பேனாவைப் பயன்படுத்துகிறேன். மேலும் நிகழும் எல்லாவற்றையும் நான் பார்க்கும் போது, அல்லாஹ்வே, நீ என்னை சரியான இடத்தில்தான் வைத்திருக்கிறாய் என்றும் இவற்றில் நான் ஒரு பூஜ்ஜியமாகவே இருக்கட்டும் என்றும் (பிரார்த்தனை செய்கிறேன்). நீங்கள் என்னை குறைவாக மதிப்பீடு செய்தாலும் பராவாயில்லை. என் எஜமானரை, என் அன்புகுரிய தூதர் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக்கூட, எல்லலோரும் அவரை ஒரு படிக்காத நபராக அறிந்தார்கள். ஆனால் அல்லாஹ் இந்த உலகில் அவருக்கு அளித்த மரியாதையை பாருங்கள் அவருடைய பெயரை நீங்கள் கேட்கும்போது, சூரா அல் அஹ்ஸாபில் அல்லாஹ் கூறுகிறான். “அல்லாஹ் இந்த நபியின் மீது தன் அருளைப் பொழிந்து கொண்டே இருக்கின்றான். மலக்குகளும் இவருக்காகப் பிரார்த்தனைகள் செய்து கொண்டே இருக்கின்றனர். அதைபோலவே நீங்களும் அன்னாருக்கு சாந்தியும் சமாதானமும் கிடைக்குமாறு பிரார்த்தனை செய்யுங்கள்.” யார் அவர் மீது சலாம் கூறவில்லை, அவர் ஒரு திமிர் பிடித்தவராவார்.

எனவே, இது உங்கள் அனைவருடையவும் முன் நான் வைக்கும் ஒரு வேண்டுகோள்... அதாவது இப்போது அவர்கள் (இளைஞர்கள்) கம்பியூட்டருக்கு முன் இல்லாவிட்டாலும் அவர்கள் ஸ்மார்ட் போனுக்கு முன்னால் உள்ளனர். ஸ்மார்போன்கள் மூலம் திரைப்படங்களும் காணலாம். அதனால் இப்போது தொலைக்காட்சிகள் முன் படங்களை பார்க்க இருக்க வேண்டிய அவசியமில்லை. ஸ்மார்ட் போன் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் எல்லா வகையான விஷயங்களையும் மக்களுக்கு பார்க்கலாம். எல்லா வகையான செயதிகளும் பெறலாம். அவர்கள் ஸ்மார்ட் போன்களுக்கு முன்

இல்லையென்றால், அவர்கள் தொலைக்காட்சிக்கு முன் அமர்ந்திருக்கின்றனர். இப்போதைய, ஊரடங்கின் போது (Lockdown) உங்களில் எத்தனை பேர் அல்லாஹ்வை நினைவு கூர்ந்து அவன் முன் அழுது மன்றாடுகிறார்கள்?

எனவே, ஜமாஅத்துச் சஹீஹில் இஸ்லாமின் அனைத்து இளைஞர்களும், குழந்தைகளும் இத்தகைய அனைத்து வகையான தீமைகளுக்கும் இரையாகிவிடக்கூடாது. மாறாக அல்லாஹ்வின் வழியில் இந்த நவீன தொழில் நுட்பக் கருவிகளை பயன்படுத்த வேண்டும். மேலும் அவர்கள் எப்போதும் பெற்றோரின் நல்ல அறிவுரைகளுக்கு செவிசாய்க்க வேண்டும். இஸ்லாத்தை தங்கள் வாழ்க்கையில் நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும். அல்லாஹ் திருமறையில் கூறுகையில், அல்லாஹ்வைத் தவிர மற்றவர்களை வணங்கும்படி இந்த பெற்றோர்கள் கட்டாயப்படுத்தாத காலம் வரை எப்போதும் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டும். வணக்க வழிபாட்டில் அல்லாஹ்வுக்கு இணை கற்பிக்க அவர்கள் கட்டாயப்படுத்தினால், இந்த விஷயத்தில், அந்த வகையான பெற்றோருக்கு கீழ்ப்படிதல் தேவையில்லை. ஆனால் அல்லாஹ்வின் அருளால் உங்களை அல்லாஹ்வின் ஜமாஅத்தில் அதாவது இறைவெளிப்பாட்டின் மூலம் அமைக்கப்பட்ட அவனது ஜமாஅத்தில் உங்களை அழைத்து வந்து, உங்களுக்கும் பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் உண்மையின் அடையாளத்தை காட்டி, இந்த நூற்றாண்டின் இறைவெளிப்பாட்டின் மூலம் அமைந்த அவனது ஜமாஅத்தில் உங்களை ஒருங்கிணைத்துள்ளான். **அல்ஹம்துலில்லாஹ்** எனவே அல்லாஹ் மற்றும் அவனது தூதர் முஹம்மது (ஸல்) ஆகியோரின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப வாழ்க்கையை அமைக்க வேண்டியதும், அதேபோல் உங்கள் காலத்தில் உங்களுடன் வாழ்ந்திருக்கும் இந்த எளியவனாகிய கலீஃபத்துல்லாஹ்வின் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ப நீங்கள் உங்கள் வாழ்க்கையை அமைக்கவேண்டியதும் மிக அவசியமாகும்.

பிள்ளைகளே, உங்கள் பெற்றோரை மதித்து, மிக மரியாதையுடன் நடந்துக் கொள்ள வேண்டும் என்பதையும், அவர்களுக்கு கீழ்ப்படிந்து வாழ வேண்டும் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். இஸ்லாத்தில் தாயின் நிலை மிக முக்கியமானது. அதேபோல் ஒரு தந்தையின் நிலையும் மிக முக்கியமானது. குழந்தைகள் பெற்றோரை மதிக்க வேண்டும். மற்றவர்கள் உங்களைப் பின்பற்றுவதற்கு ஏற்ப நீங்கள் ஒரு நல்ல முன்மாதிரியாக நடந்துக் கொள்ள வேண்டும்.

உங்களை ஜமாஅத்தும் சஹீஹில் இஸ்லாமில் இணைத்திருப்பது என்பது நீங்கள் சிறந்த முஸ்லீமாக மாறுவதற்கான ஒரு பயிற்சி களம் போன்றது என்பதை நினைவில் கொள்ளுங்கள். மேலும் ஒரு உண்மையான முஸ்லீமின் கடமைகளில் ஒன்று, முதியவர்களை (பெற்றோர்களை) மதித்து, அவர்களுக்கு கீழ்ப்படிந்து, அவர்களை மிக நல்ல முறையில் கவனித்துக் கொள்ள வேண்டும் என்பதாகும்.

கடைசி நாட்களின் அறிகுறிகளில் ஒன்று, பிள்ளைகள் பெற்றோர்களை மதிக்காமல் நடந்துக்கொள்வார்கள். இதை எனது புத்தகத்திலும் (The prophecy concerning the coming of a prophet in the Ummah Muhammadiya (pbuh)) – Page 46) நான் குறிப்பிட்டுள்ளேன்.

நிகழும் மற்றொரு பெரிய மாற்றம் மரியாதை இல்லாமை. குழந்தைகள் இனி பெற்றோர்கள் மற்றும் தாத்தா, பாட்டிகளை மதிக்கமாட்டார்கள். மேலும் அவர்கள் மீது எந்த நன்றியையும் காட்ட மாட்டார்கள். அவர்கள் தங்கள் நண்பர்களுக்கு கீழ்ப்படிவார்கள். இப்போதெல்லாம், இந்த நூற்றாண்டில் இளைஞர்கள் இருக்கும் ஒவ்வொரு வீட்டிலும் இந்த உண்மையை நாம் அனைவருக்கும் காண்கிறோம். அவர்கள் தங்கள் பெற்றோர் மற்றும் பெரியவர்களை மதிக்காமலும் அவர்களுக்கு கீழ்ப்படியாமலும் இருக்கின்றனர். இது ஒவ்வொரு வீட்டிலும் வேதனைகளை ஏற்படுத்துகிறது. **(Reported by Abu Naim upon the authority of Huzaifa bin yaman)**

ஒரு உண்மையான நம்பிக்கையாளர் என்ற நிலையில் ஒரு சஹிஹில் இஸ்லாமின் உறுப்பினர், இத்தகைய வழியில் நடந்துக் கொள்வது மிகவும் தவறு. இந்த விஷயத்தில் எனது நிலைப்பாட்டை நிலை நிறுத்த எண்ணற்ற குர்-ஆனிய வசனங்களும் ஹதீஸ்களும் உள்ளன. எனவே எனது ஜமா அத்தின் குழந்தைகள் தங்கள் பெற்றோர்களிடம் மென்மையாகவும், அன்பாகவும் இருக்க வேண்டும். அவர்களுக்கு எல்லா வகையிலும் உதவிகள் புரிய வேண்டும், முக்கியமாக, அவர்களின் தீனின் வேலைகளில் நீங்கள் அவர்களுக்கு உதவி புரிய வேண்டும். நீங்கள் சஹீஹில் இஸ்லாத்தின் எதிர்காலம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஈமானை நீங்கள் உங்களில் பிரதிபலிக்காவிட்டால், முதியோர்களை மதித்து நடந்துக்கொள்ள நீங்கள் கற்றுக்கொள்ளாவிட்டால் அது உங்களுக்கு மிகவும் மோசமாக அமையும். அந்நிலையில் அல்லாஹ்வும் அவனது கலீஃபத்துல்லாஹ்வும் உங்களில் திருப்தி

அடையமாட்டார்கள். மேலும் நீங்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளை இழந்துவிடுவீர்கள்.

எனவே, இஸ்லாத்தின் அனைத்து கட்டளைகளையும் மதித்து அல்லாஹ்வையும் அவனது கலீ∴பத்துல்லாஹ்வையும் மகிழ்விக்க உங்கள் ஆற்றலால் முடிந்த அனைத்தையும் செய்யுங்கள். அதில் உங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படிதல் மற்றும் சிறந்த முறையில் அவர்களுக்கு சேவை செய்தல் போன்றவை உட்படுகிறது. நீங்கள் சிறியவராகவும் உதவியற்றவராகவும் இருந்தபோது உங்களை வளர்த்து, உங்களுக்கு தேவையான அனைத்தையும் வழங்கியது பெற்றோர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இதனால் ஒருபோதும் உங்கள் பெற்றோரிடம் சண்டையிடவோ அல்லது எதிர்த்து பதிலளிக்கவோ செய்யாதீர்கள். இதற்கு பதிலாக அல்லாஹ்வின் அன்பு மற்றும் கருணை அவர்களுக்கு கிடைப்பதற்காக நீங்கள் அவர்களுக்காக நிறைய பிரார்த்தனை செய்யுங்கள். உங்கள் பிரார்த்தனைகளில் உங்கள் பெற்றோரை ஒரு போதும் மறந்து விடாதீர்கள்.

## ரப்பிர்ரம் ஹுமா கமா ரப்பாயினி சஹீறா

"என் இறைவா! நான் குழந்தையாக இருந்த போது என்னை வளர்த்தது போல், நீ அவர்களிடம் கருணை காட்டுவாயாக" (17 : 25)

நீங்கள் அனைவரும், குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் அல்லாஹ் உங்களுக்கு விதித்த வரம்புக்குள் இருந்து செயல்பட வேண்டும். மேலும் அவனுடைய கட்டளைகளின்படி தக்வா, நேர்மை மற்றும் ஒருவருக்கொருவர் அன்பு கொண்டு செயல்பட வேண்டும். அதற்காக நான் பிரார்த்திக்கிறேன். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு செவிசாய்த்து, உங்கள் வீட்டிலும் சமுதாயத்திலும், உலகெங்கிலும் இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்கு உண்மையான முஸ்லீம்களாக செயல்படுவோர் அதிர்ஷ்டசாலிகள்.

உங்கள் அனைவரையும் அல்லாஹ் தனது பாதுகாவலில் வைத்துக் கொள்வான் என நான் நம்புகிறேன்.

அஸ்ஸலாமு அலைக்கும் லாரஹ்மத்துல்லாஹி பரக்காத்துஹு.

கவனித்து கேட்டமைக்கு உங்கள் அனைவருக்கும் நன்றி. ஜஸாக் அல்லாஹ்.

**Translated by:**

**Azim Ahmad**

**Editing & Publishing are done by**
***AMIR***
***JAMAAT - UL-SAHIH-AL-ISLAM***
***TAMIL NADU***
**Ph No: 917502272774**